(ஈ) எடுத்துக் கொள்ளப்பெறாத கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கான பதில்கள்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே எடுக்கப்படாத கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்குப் பதில்கள் வந்த உடன், உறுப்பினர்களுடைய இல்லங்களுக்கு அவை அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்

(அ) சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு இச்சட்ட மன்றப் பேரவையிலிருந்து 6 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நியமன தாள்கள் கோரப்பட்டன. இதற்கு 13 உறுப்பினர்கள் தங்கள் நியமனத் தாள்களைக் கொடுத்துள்ளார்கள். 17—11—1987 ஆம் நாள் 3 மணிக்குள் நியமனத் தாள்களைத் திரும்பப் பெறுகிறவர்கள், திரும்பப் பெற வேண்டுமென்ற அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரையிலும் ஒருவரும் தங்களது நியமனத் தாள்களைத் திரும்பப் பெறவில்லை. உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு 13 உறுப்பினர்களிடமிருந்து நியமனத் தாள்கள் வந்துள்ளதாலும், இன்று பேரவையின் கூட்டம் இறுதி நாளாக இருப்பதாலும், இதற்கான தேர்தல் அடுத்த பேரவை கூட்டத் தொடரில் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:—

"(1) 1978-79 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியங்களிலும், சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாகச் செலவழித்த தொகை பற்றி குழு (1983-84) அளித்த